


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (5.1.2026) தலைமைச் செயலகத்தில், ஹலோ எப்.எம். நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் எஸ்.கே.ரமேஷ், துணை தலைமை செயல் அலுவலர் எஸ்.சுரேஷ் ஆகியோர் சந்தித்து, ஹலோ எப்.எம். நிறுவனத்தின் கிரீடம் 2025 சிறந்த அரசியல் ஆளுமைக்கான விருதினை முதலமைச்சர் அவர்களுக்கு வழங்கினார்கள். உடன், ஹலோ எப்.எம். நிறுவனத்தின் செய்திப் பிரிவு மேலாளர் அ.ஜெ.ராஜசேகர், நிகழ்ச்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் பி.குமுதா, நிகழ்ச்சி கருத்தாக்க மேலாளர் கவிதா ஆகியோர் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.1.2026) தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் வில்வித்தை, தடகளம், பூப்பந்து, கூடைப்பந்து, குத்துச்சண்டை, கனோயிங் மற்றும் கயாகிங், சைக்கிளிங், வாள்சண்டை, கால்பந்து, ஜிம்னாஸ்டிக்ஸ், வளைகோல்பந்து, ஜூடோ, கபடி, நீச்சல், நீச்சல் டைவிங், மேசைப்பந்து, டேக்வாண்டோ, டென்னிஸ், கையுந்துபந்து, பளுதூக்குதல் ஆகிய விளையாட்டுகளுக்கான பயிற்றுநர் பணியிடங்கள் மற்றும் மாற்றுத் திறனாளி பயிற்றுநர் பணியிடங்களுக்கு விண்ணப்பிப்பதற்கான இணையதள பயன்பாட்டினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில்

# விளையாட்டுகளுக்கான பயிற்றுநர் பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள்!

## இணையதள விண்ணப்ப பயன்பாட்டினை – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைத்தார்!

சென்னை, ஜன.7-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (05.01.2026) தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் வில்வித்தை, தடகளம், பூப்பந்து, கூடைப்பந்து, குத்துச்சண்டை, கனோயிங் மற்றும் கயாகிங், சைக்கிளிங், வாள்சண்டை, கால்பந்து, ஜிம்னாஸ்டிக்ஸ், வளைகோல்பந்து, ஜூடோ, கபடி, நீச்சல், நீச்சல் டைவிங், மேசைப்பந்து, டேக்வாண்டோ, டென்னிஸ், கையுந்துபந்து, பளுதூக்குதல் ஆகிய விளையாட்டுகளுக்கான பயிற்றுநர் பணியிடங்கள் மற்றும் மாற்றுத் திறனாளி பயிற்றுநர் பணியிடங்களுக்கான விண்ணப்பங்களை பெறுவதற்கான இணையதள விண்ணப்ப பயன்பாட்டினை துவங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

இப்பயிற்றுநர் பணிகளுக்கான கல்வி தகுதி, அனுபவம், விண்ணப்பிக்கும் முறை மற்றும் ஏனைய விவரங்கள் https://www.sdat.tn.gov.in/ என்ற இணையதளத்தில் உள்ளது.

உரிய தகுதி மற்றும் அனுபவம் உள்ள பயிற்றுநர்கள் அதில் குறிப்பிட்டுள்ள வழிமுறைகளை அறிந்து இவ்வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.



காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக மக்கள் நல்லுறவு மைய கூட்டரங்கில், நேற்று முன்தினம் (05.01.2026) அமைச்சர் ஆர்.காந்தி "உலகம் உங்கள் கையில் திட்டத்தின்கீழ் அரசுக் கல்லூரி மற்றும் அர அரசு நிதியுதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் இறுதியாண்டு மாணவ/மாணவியர்களுக்கு மடிக்கணினி வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கலைச்செல்வி மோகன், நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர், சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.க.ஆர்த்தி, ஒன்றிய குழுத்தலைவர் திருமதி.மலர்க்கொடி குமார், வாலாஜாபாத் ஒன்றியக் குழுத்தலைவர் ஆர்.கே.தேவேந்திரன், குன்றத்தூர் ஒன்றியக்குழுத்தலைவர் திருமதி.சரஸ்வதி மனோகரன் ஆகியோர் உள்ளனர்.



பம்மல் தெற்கு பகுதிக்கு உட்பட்ட வாக்குசாவடி மையங்களில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்தல்,நீக்கல் மற்றும் திருத்தல் செய்யும் சிறப்பு முகாமை,கழகத் துணைப் பொதுச் செயலாளர் மண்டல பொறுப்பாளர் ஆ.ராசா எம்.பி, தொகுதி பொறுப்பாளர் ரபி அகமது, இ.கருணாநிதி எம்.எல்.ஏ,, பம்மல் தெற்கு பகுதி செயலாளர், மண்டல குழு தலைவர் வே.கருணாநிதி ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். உடன் அனைத்து கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.




திரு.வி.க. நகர் மண்டல அலுவலகக் கூட்டரங்கில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள வில்லிவாக்கம், அன்னை சத்யா நகர் அருகில் வசிக்கும் 58 ஆக்கிரமிப்பு வீடுகளுக்கு மாற்று குடியிருப்புகள் வழங்குவது தொடர்பாக துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் (05.01.2026) நடைபெற்றது. இதில் மேயர் திருமதி ஆர். பிரியா, அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ., உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ.தலைமை!

# காஞ்சிபுரத்தில் திராவிட சமத்துவ பொங்கல் விழா!

## அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் – ஆர்.காந்தி – கழக முன்னணியினர் பங்கேற்பு!

காஞ்சிபுரம், ஜன.7-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் - மாநகர தி.மு.க மாட்ட மாநகர நெசவாளர் அணி, விசாய அணி. - கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, மகளிர் தொண்டரணி, மகளிர் அணி, விவசாய தொழிலாளர் அணி மற்றும் இலக்கிய அணி சார்பில் நடத்தும் தமிழ்ப் புத்தாண்டு மற்றறும் கலை இலக்கிய விழாக்களுடன் திராவிடப் பொங்கல் விழா இன்று (07.01.2026 - புதன்கிழமை) காலை 11 மணிக்கு அரசு நகர்(சாய் மனோன் மணியம் திருமண மண்டபம் பின்புறம்) ஓரிக்கை காஞ்சிபுரத்தில் தைத் திருநாள் தமிழர் பெருமை விழா நடைபெறுகிறது. காலை 11 மணிக்கு மங்கள இசையுடன் திராவிடப் பொங்கல் வைத்தல் நிகழ்ச்சியும், காலை 11.30 மணிக்கு காஞ்சி வீர சிலம்பம் குழுவினர் ஜி.தேவராஜ், என்.குமார் ஆகியோர் வழங்கும் தமிழர் பாரம்பரிய வீர சிலம்பாட்டம் விளையாட்டு நிகழ்ச்சியும் பிற்பகல் 12 மணிக்கு பார்த்தசாரதியின் பம்பை இசை நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.

பிற்பகல் 1 மணிக்கு தமிழர்களின் பாரம்பரிய சிறுதாணிய சிற்றுண்டி வழங்குதல் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

விழாவிற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எ. ஏ.தலைமை வகிக்கிறார். மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன் அனைவரைரயும் வரவேற்றுப் பேசுகிறார்.

கே.ஏ.செங்குட்டுவன், ஏ.எஸ்.முத்துச்செல்வம், வ.ஜெகநாதன், பி.நிர்மலா, கு.சுப்புராயன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை அமைச்சர்கள் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், ஆர்.காந்தி ஆகியோர் வழங்குகின்றனர்.

இவ்விழாவில் சிறுவேடங்க செல்வம் எம்.பி. சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., மேயர் மகாலட்சுமி யுவராஜ், சன்பிராண்ட் கே.ஆறுமுகம், எம்.எஸ்.சுகுமார் எஸ்.கே.பி.சீனிவாசன், எஸ்.சிகாமணி, கே.திலகர், எஸ்.சந்துரு அ.தசரதன், சு.வெங்கடேசன், எஸ்.கே.பி. சாந்திசீனிவாசன், ஆ. சசிகலா, செவிலிமேடு எஸ்.மோகன், வி.எஸ்.ராமகிருஷ்ணன், ஜி.சுகுமாரன், தி. அன்பழகன், பெ.சுந்தரவர தன், எஸ்.சுகுமாரன், த.விஸ்வநாதன், எஸ்.மாமல்லன், ப.சுரேஷ், பி.சங்கர், ஜெ.வரதராஜன், அ.பாலமுருகன், எஸ்.சேகர், வ.மலர்மன்னன், கே.ஏ.இளங்கோவன், அ.யுவராஜ், சி.ராதா கிருஷ்ணன், அ.சதிஷௌ என்கிற சரவணன், ஆ.செல்வி, டி.ஜெய் கணேஷ்,

நாத்திகம்நாகராஜன், டி.வெங்கட்ராமன், பா.கார்த்திகேயன், அ.சசிகுமார், எம்.தேவராஜ், மா.வெங்கடேசன், ஜெ.தேவிகா, பு.கீதா உள்பட மாநகர அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட, மாநகர, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மற்றும் மாவட்ட, மாநகர அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டு சிறப்பிக் கின்றனர்.

ம.சந்திரசேகர், ரா.கார்த்திக் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று வருகை!

# திண்டுக்கல் மாவட்டத்தில் பிரமாண்ட வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர்கள் – அமைச்சர் அர.சக்கரபாணி – ஐ.பி.செந்தில் குமார் எம்.எல்.ஏ. அறிக்கை!





திண்டுக்கல், ஜன.7-

முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நாளை (ஜன.7) திண்டுக்கல் மாவட்டத்திற்கு வருகை தருவதையொட்டி பிரமாண்டமான வரவேற்பளிக்கப்படுகிறதென்று மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் அர.சக்கரபாணி - ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் அறிவித்துள்ளனர்.

இதுகுறித்து அமைச்சர் அர.சக்கரபாணி - ஐ.பி. செந்தில் குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெறவுள்ள நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று 07.01.2026-புதன் கிழமை) வருகை தரவுள்ளார்கள்.

தமிழக முதல்வர் அவர்களுக்கு 07.01.2026, புதன் கிழமை காலை 8.00 மணியளவில் பாண்டியராஜபுரம் முதல் டோல்கேட் வரை நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதி கழக நிர்வாகிகள், உடன் பிறப்புகள் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை இளைஞர் அணி நிர்வாகிகள் சார்பிலும் கொடைரோடு, டோல்கேட் முதல் பெருமாள்கோவில்பட்டி வரை ஆத்தூர் கிழக்கு, மேற்கு, தெற்கு ஒன்றியங்கள், சின்னாளபட்டி பேரூர், அய்யம்பாளையம் பேரூர் மற்றும் சித்தையன் கோட்டை பேரூர், சாணார்பட்டி வடக்கு, தெற்கு, மத்திய ஒன்றியக் கழகங்கள் சார்பிலும்

பெருமாள்கோவில் பட்டி முதல் சின்னாள பட்டி வரை நத்தம் வடக்கு, தெற்கு, மத்தியம், நத்தம் பேரூர் கழகம் சார்பிலும் சின்னாளபட்டி முதல் செட்டியபட்டி பிரிவு வரை திண்டுக்கல், வடக்கு, கிழக்கு, தெற்கு ஒன்றிய கழகங்கள் சார்பிலும் செட்டியபட்டி முதல் பஞ்சம்பட்டி பிரிவு வரை திண்டுக்கல் மாநகரக் கழகம் சார்பிலும் பஞ்சம்பட்டி பிரிவு முதல் திண்டுக்கல், மதுரை ரோடு, தோமையார்புரம் வரை வேடசந்தூர் வடக்கு, தெற்கு வடமதுரை கிழக்கு, மேற்கு, குஜிலியம்பாறை வடக்கு, தெற்கு ஒன்றியங்கள், வேடசந்தூர் பேரூர், வடமதுரை பேரூர், எரியோடு பேரூர், அய்யலூர் பேரூர், ஒட்டன்சத்திரம் வடக்கு, மத்தியம், மேற்கு ஒன்றியங்கள், ஒட்டன்சத்திரம் நகர கழகங்கள் சார்பிலும்

தோமையார்புரம் முதல் அஞ்சலி ரவுண்டானா வரை தொப்பம்பட்டி வடக்கு, மத்தியம், மேற்கு ஒன்றியங்கள், கீரனூர் பேரூர், ரெட்டியார்சத்திரம் வடக்கு, தெற்கு, மேற்கு ஒன்றியங்கள், கன்னிவாடி பேரூர், ஸ்ரீராமபுரம் பேரூர், அகரம் பேரூர் மற்றும் தாடிக்கொம்பு பேரூர், பழனி நகரம், கொடைக்கானல் நகரம், பழனி கிழக்கு, மேற்கு, வடக்கு ஒன்றியங்கள், கொடைக்கானல் மேல்மலை, மத்தியம், கீழ் மலை வடக்கு, தெற்கு ஒன்றியங்கள், பண்ணைக்காடு பேரூர், ஆயக்குடி பேரூர், நெய்க்காரப்பட்டி பேரூர், பாலசமுத்திரம் பேரூர் கழகங்கள் சார்பிலும் சிறப்பான வரவேற்பு அளிக்கப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து மாநில, மாவட்ட கழக நிர்வாகி கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, கிளை, வார்டு கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற முன்னாள், இந்நாள் பிரதிநிதிகள், அனைத்து சார்பு அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள என அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு மாண்பு மிகு முதல் அமைச்சர் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளித்து சிறப்பித்திடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளனர்.



கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருப்பூர் கிழக்கு மாவட்டம், காங்கேயம் சட்டமன்றத் தொகுதி, சென்னிமலையில் மாவட்டக் கழக பொறுப்பாளர் இல. பத்மநாபன் தலைமையில் பேரூர் கழக செயலாளர் எஸ்எம்.ராமசாமி வரவேற்புரையில் ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.ஆர்.எஸ்.செல்வம், சி.பிரபு, பொதுக்குழு உறுப்பினர் சா.மெய்யப்பன் முன்னிலையில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் மற்றும் கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டத்தில் 50க்கும் மேற்பட்ட பெண்கள் மாற்றுக்கட்சிகளில் இருந்து விலகி கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக துணை பொதுச் செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இதில் கழக மகளிர் அணி துணைச் செயலாளர், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், கழக இளைஞர் அணி துணை செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.